திராவிடநாடு

15—5—60 வாரவெளியீடு விலை 16 காசு

கொள்கை காப்போம்!

—[வேலன்]—

முத்தமிழைக் காக்கும் முழுவுணர்வு இல்லாதோர்
இத்தரைமீ தென்செய்வர் ஏந்திழையே?—தித்திக்கும்
தேன்தமிழை நாமோதித் தேர்ந்திட்டால் நல்லபடி
ஏன்வேண்டும் மற்றவைக ளிங்கு?

மூன்று தமிழ்க்கழகம் முத்தமிழைத் தான்வளர்த்து
ஈன்ற விலக்கியங்க ளெத்தனையோ!—சான்றுதர
உள்ளனவே நூல்கள்பல ஓர்ந்தறிந்து இன்றேனும்
தெள்ளுதமிழ் தன்னைநீ தேர்.

நல்ல தமிழ்நாட்டில் நாதியற்ற இந்திமொழி
மெல்ல அடிவைத்து மேவுதே—தெள்ளுதமிழ்
மானமிலார் கைசிக்கி மாளுதே! யிவ்வுலகில்
ஏனோயிவ் வாழ்வே யினி?

செந்தமிழ்க்கு ஊறுதரச் சிந்திக்கு மோரினத்தை
எந்தவிதம் நம்புவது என்தோழீ—பந்தியிலே
வஞ்சிக்கும் சூதுடைய வாழ்வடவர் நோக்கம்நம்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

தெற்கைச் சுரண்டுகின்ற தில்லியிடம் கைகட்டி
நிற்குங் குலமே நினக்குஉயர்—நற்குணமாம்
மானமெனும் நல்லுணர்வு மட்டமோ? நீயுரைப்பாய்
ஈனகுண மன்றோ யிது!

அன்று கலமோட்டி ஆட்சிசெய்த நின்கடலும்
இன்று அயலார்கை எட்டியதேன்?—இன்றுனது
முத்து வணிகமெங்கே? முன்னோர்கள் சொத்தெங்கே?
வித்தகனே நீயே விளம்பு.

எச்சிற்சோ றுண்டு எழில்வாழ்வு வாழ்வதினும்
இச்செகத்தை விட்டு இறப்பதுமேல்—மெச்சுகின்ற
கொள்கைக்கே வாழ்ந்து குலப்பெருமை காத்துநிதம்
உள்ளபடி வாழ்வோம் உவந்து.

மானமறவன் சேரன் செங்குட்டுவன்

—(கரந்தை—கணேசன்)—

சேரன் செங்குட்டுவன் காவா நாவினர்களான கனகவிசயர்களைக் கல் சுமக்கச்செய்து கண்ணகிக்குக் கற்கோயில் கட்டியது தமிழ் நல்லுலகம் நன்கு அறிந்தது. தமிழ் மானம் காக்கத் தண்டுகொண்டு சென்ற செங்குட்டுவன் கனகவிசயர்களின் கடுஞ்சொல் கொண்டுமட்டும் வடக்கு நோக்கிச் செல்லவில்லை;... அதற்கு முன்பே செங்குட்டுவன் உள்ளத்தே வடநாட்டுப் படையெடுப்புக் காண வகையான எண்ணங்கள் உலாவியபடி இருந்திருக்கின்றன. கனகவிசயர்களின் அந்தச்சொல் அதற்கான சூழ்நிலையைச் செங்குட்டுவனுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது என்பதற்கான எண்ணத்தைக் கிளறும் சில வரிகள் சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தில் காணக் கிடைக்கிறது. அதன் அடிப்படையிலே எழுப்பப்பட்ட எண்ணப்பின்னலே இந்தச் சிறுநாடகச் சித்திரம்—ஓரங்கம்.

"கங்கைப்பேரியாற்றுக் கடும்புனல் நீத்தம்
எம்கோமகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ்ஞூற்றுவற்கு
ஒரு நீ ஆகிய செருவெங்கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கண்
கூற்றம்"

சிலப்பு; வஞ்சி. காட்சி 160—164.

"வஞ்சினம் வாய்த்தபின் அல்லது,
யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர், என்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கொற்றவற்கு அளித்து"

சிலம்பு; வஞ்சி. நடுகல் 214—217.

"உருள்கின்ற மணிவட்டைக்
குணில்கொண்டு துரந்ததுபோல்
'இமையமால் வரைக் கற்கடவுள் ஆம்'
என்ற வார்த்தை இடம் துரப்ப"

சிலப்பு; வஞ்சி. வாழ்த்து. உரைப் பாட்டுமடை.

காட்சி 1

இடம்:- அரண்மனையில் அந்தப்புரம்.

இருப்போர்:- செங்குட்டுவன், வேண்மாள்.

[சேரன் செங்குட்டுவன் அந்தப்புரத்திற்கு வருகிறான். வேண்மாள் அவனை வரவேற்கிறாள்.]

வேண்மாள்:- வாருங்கள் அத்தான்! எத்தனை நேரம்...?

செங்குட்டுவன்:- ஆம்... இல்லை...... இன்று...

வேண்:- நித்த நித்தம்தான் ஏதோ ஒன்று கூறி எப்படியோ என் வாயடைத்துவிடுகிறீர்கள். இன்று மட்டுமென்ன அப்படி ஒன்று கிடைக்காமலா போய் விடுகிறது. நீங்கள் மன்னாதி மன்னர்... உங்கட்கோ ஓராயிரம் கடமைகள்... அதில் காலை மாலையென்ற வேளையெல்லாம் எப்படித் தெரியும்... உம்...

செங்:- இல்லை வேண்மாள்-இன்று நீ நினைப்பதுபோல நான்வேண்டுமென்றே காலத்தை நீட்டிக்கவில்லை. நீ என்னைப் பழிப்பதுபோலப் பரிகசித்தாயே அது உண்மைதான்... எனக்கு மகத்தான கடமைகள்தான். என் நெஞ்சத்திலே நீண்ட நாட்களாகக் கருவிருக்கும் வெஞ்சினத்திற்குத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளும் வழி கிடைத்துவிட்டது.

[அப்போது முரசு முழங்குகிறது.]

வேண்:- முரசு முழங்குகிறது...... போர் முரசு... நெஞ்சிலே வெஞ்சினம்... வஞ்சம்... புரியவில்லையே அத்தான்... யார் அந்தப் பகைவர்கள்? பாவம்... பரிதாபத்திற்குரியவர்கள்.

செங்:- பரிதாபத்திற்குரியவர்களா... பண்புகெட்டவர்கள். மனித குலத்தை மதிக்கத் தெரியாத கடையர்கள். உடலால் தங்களை உயர்ந்தவர்கள் என்று கருதிக்கொண்டு உள்ளத்தால் உளுத்துப்போன உன்மத்தர்கள். அவர்கள் தலைகளைக் கிள்ளியெறியக் காலம் பார்த்துக் காத்திருந்தேன்; அது கடிதில் வந்துவிட்டது.

காவா நாவினாலே இன்று நம்மைக் களத்திற்கழைக்கின்றனர். தமிழாண்மை அறியாத தருக்கர்கள்! வடவாரிய அரசர்கள்! அன்றே அவர்களின் தலைகளைக் கொய்து வேல்களின் முடிக்கு மகுடம் சூட்டியிருப்பேன்... என் தாய் நற்சோணையும், தளபதி வில்லவன்கோதையும் புனித நீராடப்போன இடத்தில் போர் முறை தகுதியற்றது எனத் தடுத்துவிட்டனர்.

வேண்:- அப்படி என்ன செய்தார்கள் அத்தான் அந்த ஆரிய மன்னர்கள். நீராடப்போனவர்களிடத்திலே நீசத்தனமாக நடந்தார்கள் என்றால், அது போர்க்கள முறைக்கே இழுக்காயிற்றே! சே...அப்படிப்பட்ட அற்பர்களா அவர்கள்.

செங்:- ஆம் வேண்மாள்... ஆம்... அப்படிப்பட்ட அற்பர்கள்தான் அவர்கள். அப்பொழுது நீ இந்தச் சேர மண்ணை மிதிக்காது, சோழன் மாளிகையிலே சுந்தரக் கன்னியாய் காலம் கடத்திவந்த வேளை. நானோ... இளங்காளையாய்—இளவரசனாய்—வீரமறவர்

(4-ம் பக்கம் பார்க்க)

பாரிசில் உலகம்!

மலர் 18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (15—5—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 44

உலகப் பயணத்தின் அடுத்த கட்டம் அமைதியா அல்லது போட்டியும் பூசலுமா என்ற முடிவை உருவாக்கும் கடமையை அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு ஆகிய வல்லரசுகள் எனப்படும் நான்கு பெரும் சக்திகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. 16—5—60ல் "பாரிசில் உலகம்"—என்ற நிகழ்ச்சிப் பொருளுடைய இச்சொற்கள் மறையாமல் நிலைக்கப் போகிறது, மனித இனத்தின் மத்தியில்.

•உலக அமைதி, ஆயுத நிராகரிப்பு, ஜெர்மன்—பெர்லின் பிரச்சினை ஆகியவைகளைப்பற்றி ஒரு முடிவு காண்பது தான் இந்த மாநாட்டின் முன்னுள்ள கடமைகள். மேற்கொண்ட மூன்றனோடு, "மனித இன உரிமைப் பிரச்சினை" என்ற நான்காவது ஒன்றும் சேர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு நிலையைக் கடைசியாக தற்போது தென் ஆப்பிரிக்கா உற்பத்திசெய்து அனுப்பி வைத்துள்ளது. அரசியலால், பொருளாதாரத்தால், மக்களின் அமைதியால், மனித உரிமையால் மேற்கண்ட நான்கு விவகாரங்களும் உலகைக் கவர்ந்தவை; உலகத்தால் தோன்றியவை; எனவே உலகத்தால் தீர்த்து வைக்கப்படவேண்டியவை.

தற்போதெல்லாம் மனிதனின் சமுதாய வாழ்வோடு அரசியல் வாழ்வும் இணைந்துதான் செல்ல வேண்டும் என்ற தேவையான அவசியத்தில் இயங்குகிறது உலகம். அரசியல், மனிதர்களைக் கொண்டது தான். அதன் நிர்வாக இயந்திரத்தை இயக்கி வருவதும் மனிதர்கள்தான். ஆனால் ஆளப்படுபவர்களிலிருந்து அரசியல் கொள்கைகளையும், பிரச்சினைகளையும் நெருங்க முடியாத நீண்ட தூரத்துக்கு இழுத்துச் சென்று புரிந்துகொள்ளாத வகையிலும் புரிந்து கொண்டாலும் சலிப்படைகிற வகையிலும் விவாதிக்கும் ஒரு தனிக்கலையை உற்பத்திசெய்து ஈடுபடுத்துகிறார்கள் உலகக் கூறுகளை ஆள்பவர்களில் சிலர்.

"போர் எண்ண" இயக்கங்களும் கூட்டுச் சக்தி அமைப்பு முறைகளும், கூட இருக்கும் நான்கு நாடுகளாலும் இரண்டாவதாகக் கவனத்தில் கொண்டுவரப்பட வேண்டியவை. 'போர் எண்ண' செயல்களும் கூட்டு சக்தி அமைப்பு முறைகளும் ஒன்றில் ஒன்று இயற்கையாக தொடர்புபட்டவை. மாநாடு கூடுவதே இவையிரண்டின் மூலம் எழும் உலகக் குழப்பங்களை தடுப்பதற்காகத்தான். அரசியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பொருளாதார முன்னேற்றத்தில், அமைதிப்போட்டி முறைதான் உலக இயக்கத்துக்கு ஒத்ததே தவிர 'போர் எண்ண' அடிப்படையில் அமைந்த போட்டிமுறையல்ல. ஒரு அரசியல் முறை மற்றொரு அமைப்பை வென்று அடியோடு ஒழித்த பிறகுதான் தனது சிறப்புத் தன்மையை நிலைநாட்ட வேண்டிய அவசியம் எப்போதும் தேவையல்ல. ஒரு அரசியல் முறை தன்னுடையதுதான் உலக நாடுகள் முழுமைக்கும் பொருந்தும் என்று கருதுமானால், அது இயற்கையின் அடிப்படையில் மாற்றியமைக்கப் படவேண்டுமே தவிர, மற்றொரு அமைப்பை பலாத்காரத்தால் மாற்றியமைத்து சிறப்புத் தன்மையை நிலைநாட்ட முயன்றால் அது நீடித்த முறையாக அமையாது. அரசியல் பொருளாதார கொள்கை முறைகளால் முற்றிலும் வேறுபட்ட உலகின் நான்கு பெரும் நாடுகளும், மேற்கூறிய பலாத்காரப் போட்டியில் இறங்காமல் அமைதிப் போட்டியில் தங்களை தனித் தனியே ஈடுபடுத்திக்கொண்டு மனச்சான்றளவில் செயலில் ஈடுபட நினைக்கும் ஒரு உண்மையான சூழ்நிலையை இந்த மாநாட்டில் உருவாக்கவேண்டும்.

ஆசிய — ஆப்பிரிக்கக் கண்டங்களின் உலக முக்கியத்துவம்பற்றிய உண்மையை உச்சகட்ட மாநாடு கூட்டுவோர்கள் உணரவேண்டும். இதுவரை ஒரு சாதாரண பூகோளப் பிரதிபலிப்பு என்று அசட்டைசெய்து அலட்சியமாகப் பார்த்துவந்த மற்ற உலக நாடுகளெல்லாம் இன்று இவ்விருகண்டங்களையும் ஆச்சரியத்தோடும், சிரத்தையோடும் கவனிக்கத் தொடங்கியுள்ளன. மாநாட்டில் இடம் இல்லை என்ற அளவிலேயே அங்கு விவாதிக்கப்பட இருக்கும் பிரச்சனைகளில் இந்த இருகண்டங்களும் தொடர்புபட்டதல்ல என்பது பொருளன்று.

அடுத்து, இந்த மாநாட்டில் முதல், கடைசி ஆகிய எல்லா முக்கியத்துவமும் பெற்றிருப்பது உலக அமைதியும் ஆயுத நிராகரிப்பும். புகழ் வரலாம் போகலாம்; நாடுகளும் அரசியல் முறைகளும் தோன்றித் தோன்றி மறையலாம். ஆனால் மனித இனம் மட்டும் தொடர்ந்து இருந்துகொண்டேதான் இருக்கப்போகிறது. எனவே அதன் வாழ்வுத் தேவையான உலக அமைதி எந்தவிலை கொடுத்தேனும் அடைந்து தீரவேண்டியது ஒன்று.

இந்த ஒரே வழியைக் காண்பதற்கான "பாதை அமைப்பு" செயல்களாவது இந்த உச்ச கட்ட மாநாட்டில் துவங்கும் என்ற எண்ணத்தில்தான் உலகக் கண்கள் அனைத்தும் நம்பிக்கை ஒளியோடு பாரிசை நோக்கித் திருப்பியிருக்கின்றன.

அண்மையில் சோவியத் இரஷ்யாவில் நடைபெற்ற அமெரிக்க உளவு விமானத்தைச் சுட்டுவீழ்த்திய நிகழ்ச்சியால் இம்மாநாடு ஒருவேளை தடைப்படுமோ, இடையூறு ஏதாவது உண்டாகுமோ என்ற கவலை அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றன.

ஆனால், மேற்குறிப்பிட்ட நிகச்சியால் மாநாடு பாதிக்கப்படும்நிலை ஏற்படாது என்று பெரிதும் நம்பப்படுகிறது. எனவே, மாநாடு நல்லதொரு முடிவை உருவாக்கும் என்று நம்புகிறோம். ❋

2-ம் பக்கத் தொடர்ச்சி

களின் ஆர்ப்பே கீதமாக, முரசங்களின் முழக்கமே பக்கமேளமாக, வில்லின் ஒலியே வீணையின் ஒலியாக, வாளும் வேலும் எழுப்பும் சப்தமே சப்த சுரமாக, போர்க்களமே பொழுதுபோக்குப் பூங்காவாகக்கொண்டு காலம் கடத்தி வந்த சமயம்.

கொங்கர் செங்களத்திலே பகைமுடித்து வாகைபிடித்துக் களவேள்வி வேட்டு வெற்றி விழாக் கொண்டாடிக்கொண்டிருந்தேன். அதுபோது......

காட்சி 2

இடம்:- கொங்கா செங்களம்.

இருப்போர்:- சேரன் செங்குட்டுவன், வில்லவன்கோதை, போர் மறவர்கள்.

[கொங்கர் செங்களத்தில் போராற்றின் செங்குட்டுவன் வெற்றி விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறான். வீரர்கள் பலர் விருதுகள் பெற்ற வண்ணமிருக்கின்றனர். அதுகாலை...]

வில்லவன்கோதை:- (எழுந்து) இளவரசே...!மன்னரிடமிருந்து ஓலை வந்திருக்கிறது. (செங்குட்டுவனிடம் தருகிறான்)

செங்குட்டுவன்:- (விரித்துப் படித்து) ஆ......வில்லவா...நம் தாய் நற்சோணை கங்கையில் நீராடப் புறப்பட்டுவிட்டார்களாம். அவர்க்குத் துணையாக நாம் செல்ல வேண்டும். நமக்கென்று ஒரு சிறு அணியைமட்டும் பாதுகாப்புப் படையாக வைத்துக்கொள். மற்றைய படைகள் யாவும் தாயகம் திரும்பட்டும்.

வில்:- ஆணை இளவரசே......நான் போய் அதற்கானவற்றை ஆயத்தம் செய்கிறேன். தாங்கள் விழாவை இனிது நிறைவேற்றுங்கள்.

(விழா மீண்டும் தொடர்கிறது)

காட்சி 3

இடம்:- கங்கைக்கரை,

இருப்போர்:- சேரன் செங்குட்டுவன், நற்சோணை, வில்லவன் கோதை, வீரர்கள் சிலர்.

[கங்கைக் கரையிலே கூடாரம் அமைத்துச் சேரன் செங்குட்டுவன் தன் தாயுடன் இருக்கின்றான். வெளியில் சென்ற வில்லவன்கோதை வீரர்கள் சிலருடன் வருகின்றான்.]

செங்:: வில்லவா விசாலமான துறை கிடைத்துவிட்டதா?

வில்:- ஆம்... இளவரசே! நல்ல நீர்த்துறை, நம்மவர்கள் நீராடப் போதுமான இடம்.

செங்:- வேற்றவர்கள் யாரும் வந்துவிட மாட்டார்களோ?

வில்:- வேந்தர்கள் நீராடுவதற்கென்றே அமைந்ததாம். அதனால் அவ்விடத்தில் மற்றவர் வந்து சேர வழியில்லை. அதிலும் இன்று இங்கு ஏதோ விழா நாள்போல் தெரிகிறது, முன்னதாகவே சென்று முழுக்காடிவிட்டால் நல்லது.

செங்:- (தாயின் புறம் திரும்பி) அம்மா...

நற்:- நல்லதப்பா... நாம் முந்திக் கொண்டால் போகிறது.

செங்:- சரி... வில்லவா எல்லோரையும் ஆயத்தப்படுத்து.

வில்:- அப்படியே...!

காட்சி 4

இடம்:- கங்கை.

இருப்போர்:- செங்குட்டுவன், நற்சோணை, வில்லவன், வீரர்கள்.

[இளவரசனும், அரசியும் நீராடுகிறார்கள்]

காட்சி 5

இடம்:- கங்கைக்கரை.

இருப்போர்:- ஆரிய மன்னர்கள், பூஜ்யா, வீரர்கள்.

[ஆரிய மன்னர்கள் பாடிவீட்டில் ஏதோ விழாக் காரணமாகக் கூடிக் களிப்பிலே மூழ்கிக் கிடக்கின்றனர். கூத்தும், கும்மாளமும் நடைபெறுகின்றது. அங்கு ஒரு பூஜ்யா ஓடிச்சென்று]

பூஜ்யா:- மன்னர்களே மகத்தான அவமானம்......மகத்தான அவமானம்........மாபெரும் அவமதிப்பு............

ஆரிய மன்னன்:- என்னய்யா பூஜ்யரே ......உளறுகிறீர்.........?

பூஜ்:- மங்களகரமான இந்த வேளையிலும் நீங்கள் மதுபோதையிலே மயங்கி மனோகரிகளுடன் கொஞ்சிக் குலவி அவர்களையே தஞ்சமெனக் கிடக்கிறீர்கள். அதன் விளைவு அங்கே ...ஆரிய அரசர்களுக்கென்றே நீராட அமைந்த படித்துறையில்...........

ஆரி-மன்:- படித்துறையில்......

பூஜ்:- ஒருசற் சூத்திரன்........சூத்திர மன்னன்......தன் தாயுடன் வந்து நீராடுகிறான். உங்கட்கோ இங்கு தலையாடுகிறது.

மன்னன் ஒருவன்:- (போதையில்) குளிக்கத்தானே செய்கிறான்... போகட்டும்... போகட்டும்...... குளித்துவிட்டுப் போகட்டும்.

பூஜ்:- போகட்டும்... போகட்டும்... நமது வர்ணாசிரம தர்மம் போகட்டும்...... மனுமந்தாதாக்களின் மதிப்பெல்லாம் அழியட்டும்...... வேதங்கள் ஒழியட்டும்... ஆரிய தர்மங்கள் அடியோடு பொடிப் பொடியாகட்டும். சே... நீங்களும் அரசர்களாம்... அதிசூரர்களாம் ...உங்கட்கும் அரசாம்... அதிலே ஆட்சியாம். என்ன வெட்கக் கேடு...

மன். ஒருவன்:- பூஜ்யரே... என்ன சொன்னீர்... எம்மையா ஏளனம் செய்தீர். இப்பொழுதே பாரும் அவன் தலையைத் துண்டாடிக் கொணர்ந்து உமது காலடியிலே போடுகிறோம்.

பூஜ்:- ஆகா... இதுவல்லோ வீரம்.

மற். மன்:- ஆமா... அந்த இராசன் எந்தப் பக்கத்தான.

பூஜ்:- தெற்குப்பக்கத்தான் போலேருக்கு...

மன்னர்கள்:- தெற்கா... உர்...... (திணறல்)

பூஜ்:- ......ப்பூ... இவ்வளவுதானா அவன் ஒருத்தன். நீங்கள் ஓராயிரம் பேரிருக்கிங்க...

மன். ஒருவன்:- ஓராயிரம் பேரிருக்கோமா...? அப்போ பாத்துக்கிறோம். இராசாக்களே புறப்படுங்கள், போய்ச் சண்டை போடுவோம்.

மன்னர்கள்:- ஊம்... விடக்கூடாது தெற்கேயிருந்து வந்து, இங்கே வாலாட்டுறான்...

[அடுத்த இதழில் முடியும்.]

காஞ்சீபுரம்

15-5-60.

தம்பி!

வழக்கப்படி, இயலாதார், நான் அடுக்குமொழி கூறுகிறேனா என்று ஏளனம் லாய்த்துக் கொள்ளட்டும்—எனக்கென்னவோ, நாளெல்லாம் நாம் அனைவருமே, 'தென்னகம் பொன்னகம்' என்று கூறிக், கூறும்போதே கிடைத்திடும் தேனினும் இனிய சுவையினைப் பெற்றிடவேண்டுமெனத் தோன்றுகிறது. உண்மையினை உணராதாரும், உரிமை உணர்ச்சியினைப் பெற்றிடாதவரும், நாம் கூறுவதை வெற்றுரை என்று பழிக்கின்றனர்; உணர்ந்த பின்னும் பழித்துப் பேசிடின், உள்ளபடி கவலையும் ஓரளவு கலக்கமும் நமக்கு ஏற்படவேண்டும்; ஆனால், நமது இலட்சியத்தை வெற்றுரை என்று கூறுவோரில் மிகப்பெரும்பாலோர், உண்மையினை உணராதார்; எனவேதான், அவர்தம் கூற்று, கூச்சலளவிலே வளரும் போதுகூட எனக்குச் சீற்றம் பிறப்பதில்லை. நாம் எதை அறிந்து, அகமிக மகிழ்ந்து, உள்ளம் நெகிழ்ந்து உணர்ச்சி வயப்பட்டிருக்கிறோமோ, அதனை அவர்கள், இன்னமும் அறிந்துகொண்டாரில்லை; அதனாலேதான் அவர்கட்கு, எழுச்சி ஏற்படவில்லை. உண்மையை அவர்கள் இன்னமும் உணரவில்லை என்பதுமட்டுமல்ல, உண்மை அல்லாத ஒன்றினை அவர்கள் மிகப் பெரிய உண்மை, மறுத்திடவொண்ணா உண்மை என்று நம்பிக்கொண்டும் உள்ளனர்; எனவேதான், அவர்களிடம் எழுச்சி ஏற்படாமலிருப்பது மட்டுமல்ல, நமது பேச்சினைக் கேட்டதும், சீற்றமேகூட வந்துவிடுகிறது. சிறுமதியாளர் என்று நம்மைச் சினந்து பேசுகின்றனர்; குறைமதி அவர்தம் கோபத்தைக் கிளறியும் விட்டுவிடுகிறது. என் செய்வர்!

•

"ஐயயோ மகனே!" என்று அலறியபடி ஓடோடிவந்து, கீழே வீழ்ந்து துடித்துக்கொண்டிருக்கும் தன் மகனைக் கண்டு, கோவெனக் கதறுகிறாள் தாய். மகன, பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறான். மரத்தின் உச்சியிலிருந்து கால் இடறிக் கீழே வீழ்ந்தான். கனி பறிக்கத்தான் சென்றான், கருந்தேள் கொட்டிவிட்டது, வீழ்ந்தான கீழே; கீழேயோ ஓர் கருங்கற் பாறை, பாறையிலே மண்டை மோதிற்று; போதவே, மூளை குழம்பிப்போய்விட்டது; நினைவு அழிந்துபட்டது; தன்னைத் தூக்கி மடிமீது வைத்துக்கொண்டு அழுபவள், தன்னைப் பெற்றவள் என்பதுகூடத் தெரியவில்லை, அவனுக்கு. வெறிச்சென்று பார்க்கிறான்; விவரம் தெரியாமல் பேசுகிறான்; எழுந்தோட முயறசிக்கிறான்; இளிக்கிறான்; எதிர்ப்பட்டோரை இடிக்கிறான்.

தென்னகம் பொன்னகம்

மகனுடைய நிலை கண்டு தாய், மேலும் கதறுகிறாள். "மகனே! மகனே! இப்படிப் பாரடா, அப்பா! இதோ, பார்! ஒரு ஆபத்தும் இல்லை, உனக்கு; நான் இருக்கிறேன், உன்னைக் காப்பாற்ற! என்னைப்பாரடா, மகனே! இப்படிப் பார்! என் முகத்தைப் பார்!" என்று பேசுகிறாள்... நினைவு இழந்தவனோ இடிஇடியெனச் சிரித்துவிட்டு, "இவள் எப்படி இங்கு வந்தாள்; கடை வீதியில், ஆப்பம் சுட்டு விற்கும் அன்னமல்லவோ, இந்த மூதாட்டி. இவள் என்னைத் தன் மகனென்று சொல்கிறாளே." என்று கூறுகிறான்; கைகொட்டி நகைக்கிறான்; கூடி நிற்போரைக் கண்டு, "காணீர் இவள் பேதைமையை! நான், இவள் மகனும்!" என்று கூறிக் கெக்கலி செய்கிறான்.

மரத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்ததால்' நினைவு அழிந்துவிட்டது. பெற்றெடுத்த தாயையும் அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை, என்பதைத் தாய் தெரிந்துகொள்கிறாள். சொல்லொணாத் துயரம் இதயத்தைப் பிய்த்தெறிகிறது; எனினும் இந்தச் சமயம், புலம்ப அல்ல, மகனுடைய மனக்குழப்பத்தைப் போக்கும் மருந்துதேட, என்பதனை உணர்ந்து, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "ஆமடா மகனே, ஆமாம்! நான் ஆப்பம் சுட்டு விற்கும் அன்னம்தான். உன் அன்னை அல்ல." என்று கூறி அவனைச் சாந்தப்படுத்தி தக்கதோர் மருத்துவனை நாடி, அவன் தந்திடும் மூலிகையினை முறை தவறாதபடி பயன்படுத்தி குளிர் நீரில் குளிப்பாட்டியும், குறி அறிந்து மருந்தூட்டியும், மனம்கோணாமற் பேசியும், மகனைக், கண்ணினைக் காத்திடும் இமை எனக் காத்து வருகிறாள். மனக்குழப்பம் நீங்குகிறது; நைந்துபோயிருந்த நினைவுத் தொடர், மீண்டும் சரியாகி விடுகிறது; தூசி துடைக்கப்பட்ட கண்ணாடிபோலாகிறது மனம்; கூட இருந்து, இன்முகங் காட்டி மருந்தூட்டி வருபவள், தன் தாய் என்பது தெரிகிறது; உடனே உணர்ச்சி வயப்பட்டு தாளைப் பற்றிக்கொண்டு, தழதழத்த குரலில், "தாயே! தாயே! நாயேன் செய்த பிழை பொறுத்திடுவாய்" என்று கூறுகிறான். "மீண்டும் பெற்றேன், என் மகனை" என்றெண்ணிப் பூரிக்கிறாள் தாய்.

* * *

இடையே ஓர் கதையோ? அது ஏற்றுக்கோ! என்கிறாயா தம்பி! கதை அல்ல. கருத்து விளக்கம், கதை வடிவம்.

கனி பறிக்கச் சென்றவனைக் கருந்தேள் கொட்டிடக், கால் இடறிக் கீழே வீழ்ந்து பாறையிலே மண்டை மோதி, மனம் குழம்பிப்போய்த், தாயைக்கூட அடையாளம் தெரிந்துகொள்ளாதிருந்த மகன் போலப், புகழேணியின் உச்சி சென்ற தமிழ் இனம், நச்சரவம் போன்ற பிற இனத் தொடர்பினால் தாக்கப்பட்டுத் தடுமாறிக் குப்புறக் கீழே வீழ்ந்து, அதிர்ச்சியினால், தன் மரபு குறித்த நினைவும் கெட்டு, தாயகம் எது என்பதனையும் மறந்து, மனம் குழம்பி, வேறோர் பூமியினைத் தாயகம் என்று குளறிட நேரிட்டது.

"பரணிபாடித் தரணி ஆண்ட தமிழ் இனமல்லவோ, நீ? என்று கேட்டகாலை, தாசன் நான்! தமிழில் பேசுகிறேன், எனினும் நான் வணங்கும் தெய்வங்களுக்கு உகந்த மொழி சமஸ்கிருதம், அந்த வடமொழியே, தேவபாஷை! என்நாடு, பாரதம், இமயம் முதல் குமரிவரை உள்ளதோர் புண்யபூமி!" என்று கூறலானான், தடுமாறித் தவித்த தமிழன். விந்தியம் மறந்தான், இமயம் நோக்கித் தொழுதான். காவிரியின் புகழ் பாடத் தயங்கினான்—கரம்புகளைக் கழனிகளாக்கி வாழ்க்கையை வளமாக்கிய பொன்னியை மறந்தான், கண்காணாத் தொலைவினிலே ஓடிடும் கங்கையினைப் புகழ்ந்து, கர்மம் யாவும் நீக்கிடும் புனித கங்கை என்று போற்றிடலானான். சேரனையும் சோழனையும் செந்தமிழ்ப் பாண்டியனையும், தன்முன்னோர் என்று கூறக் கூசினான், இக்ஷ்வாகு பரம்பரை, ரவிகுலச் சோமன், என்று பேசிடத் தலைப்பட்டான். தொல்காப்பியம் என்றால் என்ன? என்று கேட்டிடவும், பாகவதம் படித்திடவும் முற்பட்டான்!

பெற்ற தாயை அறிந்து கொள்ள முடியாமல்; ஆப்பம் சுட்டு விற்கும் அன்னம் அல்லவோ? என்று கேட்ட நினைவு இழந்த மகனைவிட, இரங்கத்தக்க நிலையினைப் பெற்றான், தமிழன்.

அவன் நிலையினை மேலும், அழுத்தமானதாக்கிடத்தக்கதோர் சூழ்நிலை வேறு உருவாயிற்று; ஆங்கில அரசு நம்மைப் பிடித்துக்கொண்டது. அதனை அகற்றவேண்டி, அனைவரையும் ஒரு முகாமுக்குள் கொண்டுவர வேண்டியதாயிற்று. ஆகவே, தமிழ் இனம் பிற இனம், தமிழ் மரபு, மற்றையோர் மரபு என்பனபற்றிப் பேசவும், எண்ணிடவுங்கூட நேரம் இல்லை; வெள்ளையன் அந்நியன், அந்நியன் விரட்டப்படவேண்டும்; அதற்கு வீரம் மிகவும் வேண்டும்; அறிவாற்றல்கொண்டோர் அனைவரும் ஒன்று திரண்டு நின்றிடவேண்டும்; அதிலே வடக்கு என்றோ தெற்கு என்றோ பேதம்பேசுதல் ஆகாது, என்று 'தேசியம்' பேசப்பட்டது; அந்தத் 'தேசியம்' ஏற்றுக்கொள்ளவும்பட்டது. எனவேதான், வங்கத்து சட்டர்ஜியும் வலங்கைமான் சத்தாரும், பாஞ்சாலத்து லஜபதியும் பாஞ்சாலங்குறிச்சி சிதம்பரனாரும், அலகாபாத் மோதிலாலும், சேலத்து ஆச்சாரியாரும், பம்பாய்ப் பட்டினத்து வாடியாவும் ஈரோட்டுப் பெரியாரும், கவிஞர் தாகூரும் கர்மவீரர் கலியாணசுந்தரனாரும், முகுந்தலால் சர்க்காரும் சர்க்கரைச்செட்டியாரும்—என்று இப்படிப் பலரும் ஒன்றுபட்டு நின்றனர்; ஒரு பொது நோக்கத்துக்காக; பொது எதிரியை விரட்ட; வெள்ளை ஆட்சியை நீக்கிட.

அதன் பயனாக நன்மை ஒன்று விளைந்தது, வெள்ளை ஆட்சி ஒழிந்தது.

எதிர்பாராத வகையில் தீமை ஒன்று வந்துற்றது; தமிழன்' தன் இனம், மரபு, நாடு, மறந்ததே, அந்தத் தீமை.

அந்தத் தீமையின் விளைவாக ஏற்பட்டதே தடுமாற்றம், அந்தத் தடுமாற்றத்தினால், தமிழன் தமிழ்நாடு என்பதனை மறந்து, பாரதநாடு, இந்தியா, என்ற கற்பனைக்கு ஆட்பட்டு, நிலைகெட்டு நிற்கலானான். தம்பி! நமது இயக்கம், இந்த நிலையினை மாற்றிட வெகுபாடுபடவேண்டியதாயிற்று. மருத்துவனாகி,

மனக்குழப்பத்தை நீக்கவேண்டிய வேலையில் ஈடுபட வேண்டிவந்தது. அதிலே ஓரளவு வெற்றி கிடைத்துளது. தாயே! தாயே! என்று, நினைவு திரும்பப் பெற்ற மகன் பாசத்தோடு பேசிடுவதுபோல, இப்போது, எவரும், தமிழ்! தமிழ் இனம்! தமிழ்நாடு! என்று பற்றுக்கொண்டு பேசிடக் கேட்கிறோம்; பாசத்தைக் காட்டிக்கொள்ள முன்வருவது காண்கிறோம், தெளிவு பிறந்திடக் கண்டு மகிழ்ச்சிகொள்கிறோம்.

*

தமிழ் இனம்! மரபு! தமிழ் மன்னர்கள்! — என்றெல்லாம் பேசுவது! பத்தாம்பசலிப் பேச்சு என்று செப்பினார் கல்வித்துறை அமைச்சர் சுப்பிரமணியனார், சென்ற ஆண்டுகூட. அத்துணை முற்போக்காளரோ அமைச்சர் பெருமகனார் என்று கேட்டிடத் தோன்றும். சேரசோழபாண்டியர் குறித்துப் பேசப்படுவது கேட்டுமட்டுந்தான், இந்தக் கற்றறிவாளர், "செச்சே! ஈதென்ன, பத்தாம்பசலிப் பேச்சாக இருக்கிறதே" என்று ஏளனம் செய்கிறார், அனுமார், மூகாளி, இராமாயணம், பாரதம், போன்றவை குறித்துப் பேசப்படும்போது அல்ல!! அப்போது, அவர் நெஞ்சு நெக்குருகிக், கண்ணீர்மல்கி நிற்கும் காட்சி அளிக்கிறார்.

தமிழ் இனத்தை விழிப்புறச் செய்யும் ஆற்றல், சேரசோழபாண்டியர் பற்றிய பேச்சு எழும்போது கிடைக்கிறது, அமைச்சர் அதனைத்தான் விரும்பவில்லை. பொதுவாக, 'பத்தாம்பசலி' அவருக்குப் பிடிக்காது என்பதல்ல, பழைமையை அவர் பஞ்சாமிருதமாகக் கருதிப் பருகித்தான் வருகிறார்.

*

தமிழ் இனம், மரபு, பற்றிய பேச்சே, 'பத்தாம்பசலி' என்று கூறிய, அதே அமைச்சர் பத்து நாட்களுக்கு முன்பு, தமிழ் இனமக்களைப் பழிக்கலாமா!! என்று எழுச்சி பொங்கிடக் கேட்டிருக்கிறார், ஒரு பொதுக் கூட்டத்தில்.

அமைச்சரை, மாற்றுக் கட்சியினர், ஏசுகின்றனராம்! அது குறித்துத் தமது கவலையைக் கொட்டிப் பேசுகிறார் அமைச்சர்.

"என்னைத் திட்டுகிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். தனிப்பட்ட முறையிலே, என்னைத் திட்டிக்கொள்ளட்டும். வருத்தமில்லை. ஆனால், நான் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அமைச்சரல்லவோ! அந்த நிலையில் உள்ள என்னைத் திட்டுவது, தமிழ் இனத்தைப் பழிப்பதாகாதோ! அங்ஙனம் தமிழ் இனத்தைப் பழிக்கலாமோ!"—என்ற கருத்துப்படக், 'கனம்' பேசியிருக்கிறார்.

தமது நோக்கம் போக்கு ஆகியவைபற்றி எவர் மறுப்புரை கூறினாலும், அது, அமைச்சருக்கு அவரை ஏசுவதுபோலத் தோன்றுகிறதேயன்றி, ஏசிப்பேசும் போக்கினை எதிர்க்கட்சிகள் கொண்டில்லை. அந்த ஏகபோக உரிமை ஆளுங் கட்சியின் அறைபறை நாவினருக்கே உண்டு. எனவே, அமைச்சர், அதுகுறித்து ஆயாசப்படுவதிலே பொருளும் இல்லை, பொருத்தமும் இல்லை. ஆகவே, அவருடைய உரையில், அந்தப் பகுதியை நாம் பொருட்படுத்தவும் தேவையில்லை. அந்தப் பேச்சோடு பேச்சாக, அமைச்சர், தமிழ் இனம் என்று எடுத்துக் காட்டுகிறாரே, அதுதான், தம்பி! என்னை உலுக்கிவிட்டது. ஆச்சரியம் எனக்கு! ஈதென்ன, வேடிக்கை! ஏக இந்தியா பேசிடும் இணையிலா வீரர். பாரத நாட்டின் புகழ்பாடி மற்றையோரைச் சாடிடும் தீரர், தமிழ் இனம் என்று, பேசுகிறாரே! எப்போது இவருக்கு இந்தப் பற்று ஏற்பட்டது? இவருக்குத்தான், தமிழன் வங்கத்தான், மராட்டியன், பஞ்சாபி, என்றெல்லாம் பேசுவது, பிற்போக்காளர் போக்கு என்ற பெருநோக்கு உண்டே! இவர், எதற்காகத், தமிழ் இனம் என்று பேசவேண்டும், —என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். ஒருகணம், ஆச்சரியமே என்னைத் தாக்கிற்று. பிறகோ, என்னதான், 'ஏக இந்தியா' பேசி வந்தாலும், இயல்பு அடியோடு அழிந்தா போய்விடும்—இன உணர்ச்சி உருக்குலைந்து இருக்கலாமே தவிர, ஒரேயடியாகவா அழிந்தொழிந்து போயிருக்கும்; அவரும் தமிழர்தானே; மரபின் மாண்பு அதிகம் மங்கிட இடங்கொடாதிருந்து வரும் கொங்கு நாட்டவர் அல்லவா! எனவேதான், தமிழ் மரபுபற்றிய நினைவு எழுகிறது!! என்று விளங்கிற்று.

*

தம்பி! அமைச்சருக்குங்கூட, இந்தத் தெளிவு ஏற்பட்டிருக்கிறது என்றால், மற்றையோர் குறித்துக் கூறவா வேண்டும். உதட்டளவில், 'ஏக இந்தியா' பேசிடினும், அவர்தம் உள்ளத்திலே, தமிழ் இனம் என்ற உணர்ச்சி இருந்திடத்தான் செய்கிறது—சிறிதளவு உறங்கும் நிலை!! அந்த உறக்கத்தை நீக்கிடத்தான், உன் பணி!!

*

'ஏக இந்தியா' பேசுவதும், அதற்கு ஊறு நேரிடாதபடி பார்த்துக்கொள்வதும், தாம் சுமந்து கொண்டுள்ள கடமைகளிலே ஒன்று என்று, கருதிக்கொண்டு காரியமாற்றிவரும் அமைச்சர்களும், இன உணர்ச்சி பெறத்தக்க விதத்திலே, பலன் தந்துள்ள பணியினைத், தம்பி! நீ, பத்தே ஆண்டுகளிலே, வெற்றியுடன் நடத்திக் காட்டியிருக்கிறாய். தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்று வருகிறது, எனவேதான், தென்னகம் பொன்னகம் ஆகும் என்ற நம்பிக்கை என் போன்றோருக்கு.

என்ன அண்ணா! இப்போதுதான், ஜெர்மன் நாட்டு நிபுணர்கள், சேலத்து இரும்பு, இரும்புதான், என்று ஆராய்ந்து கூறி இருக்கிறார்கள், என்று பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது, நீயோ, தென்னகம் பொன்னகம் என்று திருப்புகழ் பாடுகிறாய்—!! என்று கேட்கிறாயா, தம்பி! கேட்கத்தான் செய்வாய். ஆனால், நான், காரணமற்றுக் கூறுவேனா? இன்றும் நமது நாட்டிலே இரும்பு தூங்கிக்கொண்டுதான் இருக்கிறது; ஆனால் துரைத்தனத்தில் உள்ள சிலர்போல, மக்கள் தூங்கிக்கொண்டு இல்லை; விழித்தெழுந்து

கேட்கிறார்கள்; வீர முழக்கம் செய்கிறார்கள். விலா நோகச் சிரித்து ஏளனம செய்தவர்களெல்லாம் இன்று, தென்னகம் வளரத்தான் வேண்டும். வேண்டாமென்று கூறுவோமா. நாங்களும் வலியுறுத்திக்கொண்டுதான் வருகிறோம் என்று பேசுகிறார்கள்.

தம்பி! தெற்கு வடக்கு என்று பேசுவது பத்தாண்டுகளுக்கு முன்பு கேலிக்குரியதாக, கண்டனத்துக்கு உரியதாகக் கருதப்பட்டது, அறிவாய். அறிந்து ஆயாசப்பட்டுமிருக்கிறாய். அறிவேன்.

இப்போது, தெற்குக் குறித்துப் பேசுவது, தென்னகத்துக்குத் தொழில் வளக்ச்சி வேண்டும், கனிப்பொருளைக் கண்டறியவேண்டும், கனரகத் தொழில் வளரவேண்டும், என்று கேட்பது, எல்லா அரசியல் கட்சிகளுக்கும், தேவையான ஒரு பேச்சு ஆகிவிட்டது. கவனித்தனையா? காங்கிரஸ் தலைவர்களேகூட, இப்போது, இந்தப் 'பாணி'யில் பேசுவதிலே, முனைந்து நிற்கிறார்கள். தூங்கிக் கிடக்கும் இரும்பினை, வெட்டி எடுத்து வெளியே கொண்டு வருவதிலே கிடைத்திடும் இலாபத்தைவிட, அதிக அளவு இலாபமல்லவா, இன்று காங்கிரஸ் தலைவர்களே, தென்னகம் குறித்த தங்கள் எண்ணத்தை, அச்சத்தை விட்டுத் தொலைத்துப் பேசுவது.

அவர்களுந்தான், பாபம், எதற்கென்று பயப்படுவார்கள்!!

தென்னகம் என்று பேசினால், மேலிடம், "ஏதேது! நீயுமா, கழகமொழி பேசுகிறாய். இதற்குக் கதர் ஒரு கேடா! இதற்கோ, 'கனம்' ஆக்கிவிட்டது. உமது உள்ளம், விரிவாக இருக்கும்; வடக்கு, தெற்கு என்ற பேத புத்தி உமக்கு ஏற்படாது; எமக்கு ஏன் இரும்புத் தொழிற்சாலை இல்லை; உரம் அத்தனையும் அங்குதானா உற்பத்தி செய்யவேண்டும், இங்கு ஏன் கூடாது? என்றெல்லாம் கேட்கிற 'சின்னப்புத்தி' உமக்கு ஏற்படாது; பாரதம்போல் உமது நோக்கம் விரிந்து பரந்து நிற்கும் என்றல்லவா, எண்ணினோம்; எரிச்சலூட்டும் விதமாகப் பேசுகிறீர்களே; குறுகிய மனப்போக்கைக் காட்டுகிறீர்களே! கெடுமதி கொண்டபின், அமைச்சர் என்று இருக்கலாமா! பாரதம் இதனைச் சகித்துக்கொள்ளுமா!!—என்று அறைவார்களோ என்ற அச்சம், நமது அமைச்சர்களுக்கு. அந்த அச்சம் காரணமாக, வடக்காவது தெற்காவது என்று பேசி வந்தனர்.

ஆனால், தம்பி! நமது கழகம், தக்க காரணங்களைக் காட்டி, வாதாடி, மக்கள், இந்தப் பிரச்சினையை உணரும்படி செய்துவிட்டது. பட்டி தொட்டிகளிலெல்லாம், கேட்கிறது, வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்ற முழக்கம். வளம் கொழிக்கிறது வடக்கே, வாட்டம் கொட்டுகிறது தெற்கே, என்ற உண்மை, நல்லோர் உள்ளமெல்லாம் பதிந்துவிட்டது. அமைச்சர்கள் செல்லுமிடமெல்லாம், கேட்கிறது, எழுச்சி முரசொலி! அவர்கள், தமது கட்சியினருடன் கூடிப் பேசும்போதெல்லாம், இந்தப் பிரச்சினை முன்னிடம் பிடித்துக்கொண்டு, வாட்டி எடுக்கிறது. எண்ணிப்பார்த்தால், தெளிவாகத் தெரியும். அமைச்சரின், மேடை முழக்கம் முடிந்த பிறகு, அவருடன் உரையாடும் வாய்ப்புப் பெற்றோருடன் அவர் பேசுவதாக இருப்பின் என்னென்ன பேச்சு நடைபெறும், என்பது.

•

"ரொம்பக் களைத்துவிட்டீர்கள்" என்கிறார், மின்சார விசிறி ஓடிக்கொண்டிருப்பதையும் மறந்து, விசிறிகொண்டு, பணிவிடை செய்தபடி, ஒரு கனவான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று உபகாரம் பேசுகிறார், அமைச்சர்.

"உமக்கு இருக்கும் களைப்பைவிடவா, அமைச்சருக்கு?" என்று கேட்டுக் குத்துகிறார் காங்கிரஸ் தொண்டர். கனவான், அமைச்சர் வரவேற்பு விழாவுக்காக, நூறு எதிர்பார்த்துச் சென்று, இருபதுமட்டுமே பெற்றதால் ஏற்பட்ட எரிச்சல் தொண்டருக்கு, தொண்டர்தம் பெருமை கூறவும்போமோ என்ற அரசியல் அறிந்தவர் கனவான்; எனவே அவர் தொண்டரின் கேலிப் பேச்சுக்கு மறுப்புரை கூறாமல், இளிக்கிறார்; புன்னகை என்று எண்ணிக்கொண்டுதான்.

"தொடர்ந்து ஒரு நாலு கூட்டம், இப்படிக் காரசாரமாக இருக்கவேண்டும். பயல்களுடைய கொட்டம் அப்போதுதான் அடங்கும்." என்று பாராட்டுகிறார் தொண்டர்.

"ஆமாமாம்" என்று ஆமோதிக்கிறார் கனவான்.

"மாதத்துக்கு ஒரு கூட்டம், முறையாக நடத்த வேண்டும்" என்கிறார் வக்கீல் வேலை பார்க்கும் பிரமுகர்.

"அடுத்த மாதம், கட்டாயம் வரவேண்டும்." என்று கூறுகிறார் தொண்டர்.

"எப்படி முடியும்? அடுத்த மாதம், முதல் வாரம், டில்லிக்குப் போகவேண்டுமே........." என்கிறார் அமைச்சர்.

கனவான் சிரிக்கிறார். ஏனெனில், அவருடைய மோடார் ஓட்டி, காங்கிரஸ் அமைச்சர்கள், எதற்கும்

டில்லிக்குச் சென்று வரவேண்டிய அவலநிலை இருப்பதைக் கண்டித்துப் பாடும், 'காவடி'ப் பாட்டை அவர் கேட்டிருக்கிறார்.

"என்ன விஷயமாக?" என்று குறுக்குக் கேள்வி போடுகிறார், வக்கீல்.

"உணவு மண்டலம் விஷயமாகத்தான்" என்று பதிலளிக்கிறார் அமைச்சர். தொடர்ந்து, உரையாடல் நடக்கிறது, சூடு பிடித்ததும்.

"என்ன சொன்னாலும் மண்டையில் ஏறமாட்டேனென்கிறது."

"ஆமாம். புத்தி கூர்மையே கிடையாது."

"புத்தி தீட்சணியம் தென்னாட்டவருக்குத்தான்."

"தென்னாட்டுக்காரர்கள் மட்டும் துணைநிற்காவிட்டால், நாறிப்போயிருக்கும் எல்லாத்துறைகளும்"

"வடக்கத்திக்காரன்களுக்கு, ஒரு விவரமும் புரிவதில்லை."

"ஆமாம், வடக்கே எம். ஏ. படித்தவனை, இங்கே நம்ம மெட்ரிக் படித்தவன் மடக்கிவிடுவான்."

"பணம் சேர்க்கத் தெரியும், வடக்கே உள்ள ஆசாமிகளுக்கு."

"தொழில் நுட்பம் தெரிகிறது, அங்கே இருப்பவர்களுக்கு."

"எல்லாம் இங்கே மட்டும் தொழில் நுட்பம் தெரியாதா? தெரியும். பெரிய தொழில் நடத்தப் பணம் வேண்டும் கோடி கோடியாக. அது இல்லை இங்கே."

"அது அந்த மார்வாடிகளுக்குத்தான் முடியும், பணம் தேட, பெற."

"காரணம் என்ன? பெரிய பெரிய பாங்க் எல்லாம் அங்கே."

"வெளிநாட்டுக் கடன் கூட, அங்கேதான்."

"ஆமாம், வெளிநாட்டானும், வடக்கே உள்ளவர்களுக்குக் கிடைக்கும் பாங்க் வசதியைப் பார்த்துத்தான், கடன் கொடுக்கிறார்கள்."

"தொழில் ஆரம்பிக்க அனுமதி கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. டில்லிக்கு அல்லவா போக வேண்டி இருக்கிறது."

"என்ன செய்வது, சட்டம் அப்படி இருக்கிறது."

"என்ன சட்டம்! பெரிய சட்டம்! நமது குடுமியை அவனிடம் கொண்டுபோய்க், கொடுத்துவிட்டு, சட்டம் சட்டம் என்று பேசினால், என்ன பலன்."

"அடித்துக் கேட்கவேண்டும், இனி."

"அதிகமாக அதட்டிக் கேட்டால், கிடைப்பதும் குறைந்துவிடும்."

"எத்தனை நாளைக்கு அப்படிப் பயப்பட்டுக் கொண்டிருப்பது. நாம் பயப்படப், பயப்பட, அவன் கொழுக்கிறான்."

"அதைத்தான், அந்தப் பயல்களும் சொல்லுகிறார்கள்—வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று."

"இந்தக் கூச்சலும் இல்லை என்றால், நமக்கு இப்போது கிடைக்கிறதே இது கூடக் கிடைக்காது."

"அது ஒரு விதத்திலே நியாயம்தான். ஆனால் நாட்டைத் துண்டுபோடுவது சரியாகுமா? ஒற்றுமை கெட்டுவிடுமே."

"ஒற்றுமை, ஒற்றுமை என்று நாம்தான் பேசுகிறோம். வடக்கே பார்த்தீர்களா? ஒரு பம்பாய் பட்டினத்துக்கு எத்தனை மண்டைகள் உடைந்தன?"

"பழுத்த தேசபக்தர் ஆனேகூட, கிளர்ச்சி செய்கிறாராமே."

"ஆமாமாம்! அந்தந்த இராஜ்யக்காரனும், தன் உரிமைக்காகப் போராடுகிறான்."

"இப்படியே, போனால் என்ன ஆவது?"

"என்ன ஆகும்! திராவிட நாடு திராவிடருக்கே!"

•

தம்பி! இதே வாசகங்கள் பேசப்படுகின்றன என்று கூறவில்லை—இந்த முறையில், இந்தக் கருத்துப்படப் பேசப்படுகிறது. என்ன பொருள் என்கிறாய் இதற்கு? தடுமாறிக்கிடப்பவர்களும், தெளிவும் துணிவும் பெற்று வருகிறார்கள், என்பதுதான்.

•

"துணிவு இல்லை இந்த அமைச்சர்களுக்கு! தென்னகத்தின் உரிமைக்காக வாதிட, போரிடத் துணிவு இல்லை, என்று நமது கழகம் பேசிவருகிறதல்லவா? அது, நமது அமைச்சர்களுக்கு இப்போதுதான், சுருக்கென்று தைத்திருக்கிறது. இரண்டு மூன்று மந்திரிகள், நாங்கள் கோழைகள் அல்ல! வடநாட்டுக்கு நாங்கள் அடிமைகள் அல்ல! வடநாட்டுக்காரனிடம் நாங்கள் பயப்படவில்லை. அடங்கி நடக்கவுமில்லை. எங்களுக்கு என்ன அவர்கள் எஜமானர்களா! எங்களுக்கு எஜமானர்கள் இங்கே உள்ள மக்கள், வடநாட்டுக்காரரல்ல." என்று பேசிவருகிறார்கள்.

வீரப் பேச்சு—ஒப்புக்குப் பேசினாலும் — கேட்கச் சுவையுள்ளதாகத்தான் இருக்கும். ஆனால், ஆட்சி முறை, இருக்கும்விதம், இங்குள்ளவர்கள், டில்லியிடம் சென்று, கையேந்தவேண்டிய, 'அடிமைத்தனத்தை, ஏற்படுத்திவைக்கிறது. அதைமீறியோ, புறக்

கணித்தோ, அமைச்சர்கள் இயங்கவே முடியாது. கூட்டுக்குள் இருக்கும் பறவை, சிறகடித்துக் காட்டினாலும், வெளியேவந்து, விண்ணிலே பறந்திடவா முடியும்! அதுபோலத்தான், நமது அமைச்சர்களும், தமது வீரதீரம்பற்றி மேடையிலே ஆயிரம் முழக்கினாலும், நடைமுறையிலே, கூண்டுக்குள் சிக்கிக் கொண்ட நிலையில்தான் உள்ளனர்.

இதை உணர்ந்து மக்கள் கேட்கும்போது, அமைச்சர்கள், சில வேளைகளிலே, உண்மையை கக்கியும்விடுகிறார்கள்.

"எங்களுக்கு உள்ள அதிகாரம் இவ்வளவுதான். இந்தக் காரியம் (டில்லி) மத்திய சர்க்காரிடம்தான் கேட்க வேண்டும்."

என்று, எதற்கெடுத்தாலும் இரும்புத் தொழிற்சாலை துவக்குவதிலிருந்து, கரும்பாலை அமைப்பது வரையில், அரிசிகொள்முதல் செய்வதிலிருந்து புளி ஏற்றுமதியைத் தடுப்பது வரையில், கூறவேண்டி வருகிறது.

இது விளக்கம். நிலைமைக்கு விளக்கம்.

ஆனால், பிரச்சினைக்கு இது பரிகாரம் ஆகாது.

பீடித்திருப்பது காசநோய், என்று மருத்துவர், கண்டறிந்து கூறிவிட்டால், நோயாளி திருப்திப் பெற்றுவிடமாட்டான். அதற்கு, என்ன மருந்து? என்பதுதான், அவனுக்கு உள்ள கவலை. அதைத்தான் அவன் கேட்பான்.

அஃதேபோல, அமைச்சர்கள், டில்லிக்கு உள்ள அதிகாரம்பற்றியும், அந்த அதிகாரம் எப்படிக் கிடைத்தது என்ற சட்டவிளக்கத்தையும் கூறிவிட்டால், தெளிவு கிடைக்கும்; ஆனால் மனக்குமுறல் அடங்கிவிடாது.

ஏன் அப்படி ஒருமுறை இருக்கவேண்டும்?

எல்லா, உயிர்ப்பிரச்சினையையும், டில்லியிடம் ஒப்படைத்துவிட்டு, ஏன் இங்கு, செயலாற்ற முடியாதவர்களாக இருக்கிறீர்கள்?

அதிகாரமற்ற ஆட்சியால், என்ன பலன்?

முறையை மாற்றுங்கள்! புதுச்சட்டம் இயற்றுங்கள்.

நமது அரசு, முழு உரிமை பெற்றதாக அமைய வேண்டும்.

இவ்விதம், மக்கள் மன்றத்தில் இப்போதே பேசுகிறார்கள். இன்னும் சில நாட்களிலே, காங்கிரஸ் கமிட்டிகளிலேயே, வெளிப்படையாகப் பேசப்போகிறார்கள்.

தம்பி! தென்னகம் பொன்னகமாகும், என்று எனக்கு, நம்பிக்கை ஏற்படுவதற்குக் காரணம், நான், மேலே கூறியவைகளுக்கான, அறிகுறிகளை, நிழலுருக்களைக் காண்கிறேன், என்பதுதான்.

இந்த நல்ல சூழ்நிலை மேலும் நேர்த்தியானதாக ஒரே ஒரு வழி உண்டு. அதுதான் 1962-ல் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலில், நாம் பெற்றுள்ள புதியவலிவினை விளக்கிடத்தக்க அளவிலே, வெற்றி பெற்றுக்காட்டுவது. நமது தேர்தல் முழக்கமே இதுதான், தம்பி! தென்னகம் பொன்னகம் ஆகவேண்டும் என்பதுதான்.

இனம், மரபு, வரலாறு என்பவை வழங்கிடும், உணர்ச்சியைப் பெற்றுள்ள, எழுச்சிபெற்ற எவருக்கும், ஏற்புடைய இலட்சியம் இது; தென்னகம் பொன்னகம் ஆகவேண்டும் என்பது. அந்த இலட்சியத்தை எங்கும் பரவிடச் செய்திடும் ஆற்றல், உனக்கு உண்டு, அறிந்து அகமகிழ்கிறேன் நான். அறிந்து அச்சமடைகிறார்கள், மாற்றார். தூற்றினால், நீ துவண்டுவிடுவாய் என்று எண்ணுகிறார்கள். தூற்றிய கனகவிசயன் தலைமீது கல்லேற்றிய சேரன், தமிழன். அதனை நாமறிவோம்; நம்மை நடைப்பிணமாக்கிட ஏக இந்தியா பேசிடும் ஏகாதிபத்திய வாதிகட்கு அது தெரியாது.

கல்லைத் தலையில் ஏற்றியது, அந்த நாட்களில்.

இப்போது, தென்னகம் பொன்னகம் என்ற சுவைமிகு, பயன்தரும் சொல்லினை, அனைவர் நெஞ்சிலும் பதியவைப்பதுதான், நாம் மேற்கொள்ளவேண்டிய முறை.

கருவில் உருவாகி வரும் குழவி, காலால் உள்ளே மெள்ள உதைத்திடுவது உணர்ந்து, கவர்ச்சிமிகு புன்னகை புரிவாள், பூவை! தென்னகம் பொன்னகம் என்ற கருத்துக்கு நெஞ்சிலே இடமளித்துள்ளோர் அனைவரிடமும் காணப்படும் புன்னகை, அத்தகைமையது. புன்னகைக்குக் காரணம் என்ன? புதிய உற்சாகத்துக்குக் காரணம் என்ன? என்று கேட்போரிடம்

தென்னகம் என்னகம்
தென்னகம் பொன்னகம்
தென்னகம் நல்லகம்

என்பதனை விளக்கிக் கூறு, தம்பி! பார்! பிறகு! படை திரண்டிடும்! பகை மருண்டிடும்! வெற்றி பூத்திடும்! விழிகள் களிநடமிடும்! தென்னகம் பொன்னகமாகி நம்மை மகிழ்விக்கும்.

அண்ணன்,
அண்ணாதுரை

எரிமலை கக்குமுன்!

கி. சோழன்

உலகின் இருண்ட கண்டம் என்றழைக்கப்படும் "தென்னாப்பிரிக்கா" இன்று அகில உலகிலும் ஒரு பிரச்சினைக்குரிய பகுதியாய்—உலக மக்களின் கண்ணோட்டத்தை தம்பால் இழுத்துக் கொண்டுள்ளது. நிறவெறியை எதிர்த்து ஆப்பிரிக்க மக்கள் நடாத்துகின்ற போராட்டம் தியாகத் தழும்புகள் கொண்டதும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றதுமாகும்! பல்லாயிரக்கணக்கான நீக்ரோ இளைஞர்கள் இன்று அடிமை விலங்கொடிக்கும் பணியிலே தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்! தென்னாப்பிரிக்காவின் வீதிகளிலே ஏகாதிபத்திய வெறிகொண்ட ஆங்கிலேயரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி மடிந்துகொண்டிருப்போரின் எண்ணிக்கை நாளும் வளர்ந்த வண்ணமுள்ளது! அண்மையில்கூடப் பயங்கரமான வெறிச்செயல்கள் அங்கே தலைவிரித்தாடின; ஏன் இந்த நிலை ஏற்பட்டது?

சுமார் இருபத்து ஏழரை இலட்சம் ஆங்கிலேயர்கள் இன்று எண்பத்து மூன்று இலட்சம் ஆப்பிரிக்க மக்களை அதிகாரத்தால்—ஆணவத்தால் அடக்கியாண்டுகொண்டு வருகிறார்கள்; அந்த அடிமைப்பட்டுக் கிடக்கும் கறுத்த மக்கள் உயர்த்திய விடுதலைப் போர்க்கொடிதான் இருண்ட கண்டத்தின் வீதிகளிலே செங்குருதி பாய்ந்தோடக் காரணமாகும்! ஆப்பிரிக்க மக்களின் இந்த விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக அங்கே வாழ்ந்துவரும் பன்னிரண்டரை இலட்சம் ஆசிய மக்களும் துணை நிற்கின்றனர்!

1652-ம் ஆண்டு ஒரு டச்சுக்காரன் ஆப்பிரிக்காவின் "குட் ஹோப்" என்ற பகுதியில் காலை வைத்தான்! அவனுடைய நோக்கமெல்லாம் டச்சு, ஈஸ்ட் இந்தியா கம்பெனிகளுக்கு காய்கறிகள் சேகரித்து அனுப்பவேண்டும் என்பதுதான்; ஆனால் பொன் கொழிக்கும் அந்த நிலப்பரப்பின் செழிப்பைக் கண்ட அவன் அங்கேயே தங்கிவிட்டான்! அவனைத் தொடர்ந்து பல டச்சுக்காரர்கள் அங்கே குடியேறினார்கள்! அப்படி வந்தவர்கள் அச்சுறுத்தியும், இச்சகம் பேசியும் தென்னாப்பிரிக்க மக்களை ஆட்டிப் படைத்தனர்; அவர்களைக்கொண்டு அந்த நிலங்களைப் பண்படுத்தினர்! ஆதிக்கம் டச்சுக்காரர்களின் கைக்குச் சிக்கியது. டச்சுக்காரர்களின் குடியேற்றத்தைக் கண்ட ஆங்கிலேயரும் அங்கே குடியேறத்தலைப்பட்டனர். ஆங்கிலேயர் அங்கே ஒரு காலனியை உருவாக்கினர்; நிரந்தரமாகத் தங்கினர். காலப்போக்கில் ஆங்கிலேயர்களின் வருகை அதிகரித்து, டச்சுக்காரர்கள் நாட்டின் உட்பகுதிகளுக்குத் தள்ளப்பட்டனர்; அங்கே அவர்கள் போயர்கள் என்ற பெயரில் அழைக்கப்பட்டனர்; அவர்களது எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது! அந்த நேரத்தில் 'வெல்ட்' நிலப்பரப்பில் வாழ்ந்துகொண்டிருந்த பயங்கரவாதிகளான "சூலா" இனத்தாருடன் கடுமையான போர் புரிந்து போயர்கள் அவர்களை அடக்கினர்; அங்கே அவர்கள் நாடு நகரங்களை அமைத்தனர், நிரந்தரக் குடிகளாயினர்! அதற்குள் தென்னாப்பிரிக்காவிலுள்ள, விலையுயர்ந்த தங்கம், வைரம் போன்றவைகள் கிடைக்கும் சுரங்கங்களை அவர்கள் கைப்பற்றியிருந்தனர்; செல்வங்கள் அனைத்தும் போயர்களிடம் அகப்பட்டிருப்பதை அறிந்த ஆங்கிலேயர்கள், ஒருநாள் அந்தப்போயர்களுடன் போர் தொடுத்தனர்; ஆங்கிலேயரின் கடுமையான தாக்குதலின் முன் போயர்கள் பணிந்தனர்! அதுவரையில் சுதந்தரமாக அதிகாரம் செலுத்தி வந்த போயர்களின் சுதந்தரத்தையும், சுய உரிமைகளையும் ஆங்கிலேயர் பறித்துக்கொண்டனர்! என்றாலும் இருதரப்பினரிடையேயும் அடிக்கடி மோதுதல்கள் ஏற்பட்டவண்ணமிருந்தது!

1909-ம் ஆண்டு இரு தரப்பினரும் ஒன்றுசேர்ந்து ஓர் ஒப்ப

தம் செய்துகொண்டனர் அந்த ஒப்பந்தத்தின்படி பிரிட்டிஷ் வல்லரசின் கீழ் தாங்கள் ஒரு யூனியனாக இயங்குவது என்று முடிவு செய்துகொண்டார்கள்! இப்படி உருவாக்கப்பட்ட நாடுதான் இன்றைய தென்னாப்பிரிக்க யூனியன்! நாடு அவர்களுக்கு நிரந்தரமானதும், கறுப்பர்—வெளுத்தவர் என நிறப் பாகுபாட்டை அவர்கள் மிகத் தீவிரமாக வளர்த்தார்கள்! கறுப்பர்களை மிகக் கேவலமாக நடத்தினர். தங்க, வைரச்சுரங்கங்களில் கட்டாயப்படுத்தி வேலை வாங்கினர்; மறுத்தோரைக் கொடிய தண்டனைக்கு ஆளாக்கினர்! தாங்கள் உல்லாச வாழ்வு வாழ்வதற்கு அவர்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர்! தங்கள் ஆடம்பர வாழ்விற்கென்று ஒரு புது நகரத்தை உருவாக்கினர்; அந்த நகரம்தான் "ஜோகன்ஸ்பர்க்" என்று அழைக்கப்படும் பெருநகரமாகும்! அந்த நகரத்தை உருவாக்குவதற்கு கறுப்பர்களின் செங்குருதிகள் பிழிந்து நீராக்கப்பட்டன! அப்படி உருவான அந்த நகரத்திலே உட்கார்ந்துகொண்டு ஆதிக்கம் செலுத்தினர் ஆளும் பீடத்தார்!

1886-ம் ஆண்டுக்குப்பின்னர் தென்னாப்பிரிக்க சுரங்கங்களிலிருந்து ஆங்கிலேயர் எடுத்த தங்கத்தின் மதிப்பு எட்டு மில்லியன் டாலர்களாகும்! மொத்த நிலப்பரப்பின் 88-சதவிகிதம் ஆங்கிலேயருக்குச் சொந்தமாக்கப்பட்டது! மீதமிருந்த 12-சதவிகித நிலத்தில் பயிர்செய்துதான் அந்நாட்டு மக்கள் வாழவேண்டியிருந்தது! அதன்விளைவு நாட்டில் பஞ்சமும், பசியும், தலைவிரித்தாடியது. வேறு வழியில்லாமல் ஆங்கிலேயர்களின் தயவை நாடி அவர்களிடம் வேலைக்கமர்ந்து வாழவேண்டிய கட்டாய நிலை ஆப்ரிக்க மக்களுக்கு ஏற்பட்டது! என்றாலும் அவர்கள் உள்ளத்திலே எரிமலை தோன்ற ஆரம்பித்தது! அன்று முளைத்த எரிமலைதான் இன்று பயங்கரமான புகையைக் கக்கிக்கொண்டு அனைவரையும் அச்சத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறது!

1948-ம் ஆண்டு இந்தக் கறுப்பர் பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினையாகி உலகின் கண்களில்பட்டது! அதுவரையில் புகைந்திருந்த நெருப்பை அப்பொழுதுதான் உலகம் கவனித்தது. "டாக்டர் டேனியல் மாலான்" என்ற நிறவெறியின் மொத்த உருவம் அன்று அரசுக் கட்டிலில் வீற்றிருந்தான். அவன் உருவாக்கிய சட்டங்கள்தான் நிறவெறியை உச்சகட்டத்திற்கு உந்தித் தள்ளியது! ஆங்கிலேயர்—வெள்ளையர் வாழ்கின்றபகுதிகளில் ஏனைய கறுப்பர்கள் வாழக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டது' அந்தச் சட்டம் தீவிரமாக அமுல் நடத்தப்பட்டது. கலப்பு மணங்கள் தடைசெய்யப்பட்டன; ஒவ்வொரு இனமும் தனது புனிதத்தன்மையைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும், எந்த இரத்தக்கலப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது; என்று மாலானின் அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. அதன் விளைவு ஆங்கிலேயர் அல்லாதார் நாயினும் கேவலமாக நடத்தப்பட்டனர்! இரயில் வண்டிகளில் — சிற்றுண்டி விடுதிகளில்— அலுவலகங்களில்— நீதிமன்றங்களில்— மருத்துவமனைகளில்—விளையாட்டு அரங்கங்களில், எங்கும் அவர்கள் அவமதிக்கப்பட்டனர், அதன் விளைவுதான் இருண்டகண்டத்திலே எழுந்துள்ள உரிமைத்தீயாகும்! வளர்ந்து வருகின்ற விடுதலை உணர்வை, ஆணையாலும், அதிகாரத்தாலும் அடக்கிவிடலாம் என்று தென்னாப்பிரிக்க அரசு கனவுகாணுமேயானால், அது பகற்கனவாகப் போய்விடும் என்பது உறுதி! ஆதிக்கபீடத்திலே அமர்ந்திருப்போர் பதவியெனும் பெருமயக்கத்தில் மூழ்கிக்கிடக்கிறார்கள்! மிகவிரைவில் மயக்கம் தெளிந்து மார்க்கம் காணுவது நல்லது. இல்லையேல் உலகவரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தை எழுத நேரிடும். புகையும் எரிமலையைக் கக்கவிடாமல் பார்த்துக்கொள்வது ஆதிக்கபீடத்தில் அமர்ந்திருப்போருக்கு மிகநல்லது

★

தி. மு. கழகத்
தேர்தல் விதிமுறைகள்

கழகத்தின் எல்லா அமைப்புகளுக்குமான தேர்தல் நடைபெற வேண்டிய முறைகள், கிளைகள், உறுப்பினர், தேர்தல் ஆணையாளர், வேட்பாளர் (அபேட்சகர்) ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத்தாள் போன்ற விவரங்கள் அடங்கிய,

தி. மு. கழகத் தேர்தல் விதி முறைகள் எனும்
தலைமைக் கழக வெளியீடு
தனிப் படி விலை 12 காசுகள்

(அஞ்சல் மூலம் பெற விரும்புவோர் தேவைப்படும் படிகளுக்குரிய அஞ்சல் செலவையும் சேர்த்தனுப்பக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.)

தி. மு. க. தலைமை நிலையம்,
'அறிவகம்' சென்னை-13.

கலந்த கனவு

—[டி. ஆர். சுவாமிநாதன்]—

தண்ணமுதுடன் பிறந்திட்ட வெண்ணிலவு தன் தண்ணொளியினை மறந்து மேகத் திரையில் மறைந்துவிட்டது. குளிர்காலத்து இரவு. நிலவு குளிர்ந்ததால் நிலமும் குளிர்ந்தது. அக்குளிர் வீட்டிலிருந்து வெளியே செல்ல யாரையுமே அனுமதிக்கவில்லை. ஆம்! ஊரினர் அனைவரும் தங்களது இல்லங்களில் படுத்துக்கிடந்தனர் சோம்பலுற்று. ஆனால் அந்தப் பையன், தெருவிளக்கின் ஒளியிலே புத்தகம் ஒன்றினைக் கையிலேந்திப் படித்தவாறு இருந்தான்.

அவனது குரல் குளிர் மிகுதியால் கரகரத்து வெளிப்பட்டது. அத்தெருவிலே பயங்கர அமைதி நிலவியதால், அவன் துணை தேடுமுகத்தான் சிறிது உரக்கப் படிக்கவே முயற்சித்தான். அடிக்கடி படிப்பை நிறுத்திவிட்டு அங்குமிங்கும் பார்த்துவிட்டுப் பின்னர் தொடர்ந்து படிப்பான். வயது அதிகமிருக்காது. தெரு விளக்குப் போதிய வெளிச்சந்தராத காரணத்தால் கண்களுக்கு அவன அதிகம் வேலை தந்தான.

ஆனால் நிமிடத்திற்கு நிமிடம் குளிரின் கொடுமை அதிகரிக்கவே அவனால் உரக்கப்படிக்க முடியவில்லை. பற்கள் கிடுகிடுத்தன. விளக்குக் கம்பத்திற்கு எதிர்வீட்டில் இன்னமும் விளக்கு எரிந்த வண்ணமிருந்தது. யாரோ படிக்கிறார்கள் போலும் என்று எண்ணினன். அப்படியானால் பொழுது அதிகம் ஆகிவிடவில்லை என்று எண்ணிய அவன், எதிர்வீட்டு விளக்கு அணையும்வரை படிப்பது என்ற முடிவிற்கு வந்தான்.

எப்பொழுதும் அந்தத் தெருவில் யாராவது 'போய்வந்தவாறு' இருப்பார்கள். ஆனல் இன்று ஏனோ ஊரடங்கிப் போய்விட்டது. தனிமை இன்று பெரிதும் வாட்டியது அவனை. குளிரால் நடுங்கிய அவனது உடல் அவனைப் படிப்பில் அக்கரைகாட்ட விடவில்லை. எதிர்வீட்டைப் பார்த்தான். வாயிற்புறத்தில் இருந்த அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. நீலநிறத்துணி அவனது பார்வையை உட்புறத்தின் நிகழ்ச்சிகளைக் காணமுடியாதாக்கிவிட்டது. அந்த வீடு பெரிய வீடு! யாரோ படித்துக்கொண்டிருப்பார்கள், அல்லது ஒரு வேளை புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்கிக் கொண்டிருப்பார்களோ என்னவோ. இந்த எண்ணம் தோன்றியதும் அவனுக்குப் படிக்கத் தொடங்குகையில், கையில் எடுத்து வந்த புத்தகத்தை முடிக்கவேண்டுமென்று முடிவு செய்தது நினைவிற்கு வந்தது. உடனே படிக்க ஆரம்பித்தான்.

ஆனல் ஏனோ இன்று அவனால் சிந்தனையை ஒருமுகப்படுத்திப் படிக்க இயலவில்லை. அவனது கற்பனை எதிர்வீட்டில் நீலநிறத் திரையினையும் தாண்டி உட்புறத்திற்கு வந்தது தெருவினைப் பார்த்தான். தொலைவில் அவனது அருமை அன்னை அவனை அழைக்க வந்துகொண்டிருந்தாள்.

புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தாயைத் தொடர்ந்தான். அவள் அவனை அன்புடன் தோளில்கைபோட்டுக் கட்டியணைத்தவாறு அழைத்துச் சென்றாள்.

"அம்மா, நீ நடுங்குகிறாய். உன் உடல் மிகவும் நடுங்குகிறதே, ஏன் அம்மா."

இன்று குளிர் மிகவும் அதிகம் தம்பி."

"ஆமாம்மா. இன்று மிகவும் அதிகம்! என்று ஆமோதித்தான்.

"உனக்கு குளிரவில்லையா தம்பி" அக்கரையுடன் வினவினாள் தாய்.

"எனக்குத்தான் போர்வை இருக்கிறதே அம்மா."

அது மிகப் பழைய கம்பளி. அவன் தாய் ஏதோ ஒரு கடையில் பழைய விலைக்கு வாங்கிய கம்பளி. அதுதான் இந்தக் குளிரில் அவனுக்கு பெரிதும் உதவியது. 'என்றைக்கு இடிந்து விழப்போகிறேம்" என்று தயாராகக் காத்திருந்த ஒரு மண் சுவர்க் குடிசை ஒன்றில் அவர்கள் நுழைந்தார்கள். இந்தக் குடிசைதான அவர்களது "ஏக போக" சொத்து.

வீட்டினுள் நுழைந்ததுமே தயாராக இருந்த படுக்கையில் படுத்தான் சிறுவன். அவனது அன்னை அவன் அருகில் படுத்தாள். பின்னர் அன்புடன் அவனதுதலையைக் கோதிவிட்டாள் அந்த அன்பிலே அகமகிழ்ந்தான் அவன்.

"அம்மா இனிமேல் இப்படித்தான் குளிராக இருக்குமா?"

"இல்லேடா கண்ணு."

"அம்மா, இன்றைக்கு என்னால் அதிகம் படிக்க முடியவில்லை.

"பரவாயில்லேடா குழந்தை"

ஆனல் நான் மிகவும் நன்றாகப் படிக்கவேண்டும் இல்லையா அம்மா.

ஆமாண்டா தம்பி.

அம்மா, அம்மா.........ம்ம், நான் என்னம்மா செய்யவேண்டும்?

"எப்போடா குழந்தை".

"படிப்பு முடிந்த பிறகு"

"பிறகு நீ ஒரு பெரியமனிதனாகப் போய்விடுவாய்" என்று பெருமூச்சுவிட்டவாறே கூறினாள்.

அந்த பதில் அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தது. அப்பொழுதே ஒரு "பெரிய மனிதனாகி விட்டாற்போன்று கனவு கண்டான். அவன் தாய் கூலி வேலை செய்து பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி, பல வீடுகளில் மாஇடித்துக் கொடுத்துத் தன் மகனைப் படிக்க வைத்தாள். அவளது ஒரே சொத்து அவளது அருமை மகன். அவன் படிக்கிறான் என்று சொல்வதில் அவள் பெருமிதங்கொண்டாள். அவளைச் சிலர் கேட்டிருக்கிறார்கள். "நீ ஏம்மா துன்பப்படறே? உன் பையனை வேலைக்கு அனுப்புவது தானே." அவள் அளித்த ஒரே பதில் புன்சிரிப்புதான். எப்படியோ பையன் படித்து ஒரு பெரிய வேலையில் அமர்ந்துவிட்டால் பிறகு............!

தம்பி, நீ பெரிய வேலையில் சேர்ந்ததும் நமக்கு எல்லாம் கிடைக்கும். அவள் அவனுக்குப் பெரிய பெரிய இடங்களில் அவள் கண்ட "சுக போகங்களை" தெரிவித்தாள்.

தினமும் ஆரஞ்சுப்பழம், ஓவல்டின் இன்னபிற வகைகளைத் தெரிவித்தாள்.

அம்மா, நமக்கு விளக்கு ஒன்று கிடைக்கும், இல்லையா.

ஏன் கிடைக்காது? மிகவும் அழகான ஒரு விளக்குக் கிடைக்கும்.

பிறகு நாம் ஒரு பெரிய வீட்டில் நீலநிறத் திரைகளைக் கட்டிக்கொள்ளலாம் அம்மா.

அவள் பதில் பேசவில்லை' அவள் சிந்தனை பறந்தது. அந்த இடத்தில்—குடிசையில் அவள் தனது கணவனுடன் இன்ப வாழ்வு நடத்திய காட்சி, பையனைப் பெற்றெடுத்த காட்சி, பின்னர் தனது கணவன் இருமி இருமிச் செத்த நினைவு எல்லாம் தோன்றியது. உடனே "அவள் நாம் இந்த வீட்டில் இருக்கலாண்டா கண்ணு. வேறு வீடு நமக்கு வேண்டாம்" என்றாள்.

விநாடிகள் சில சென்றன. அவள் திரும்பவும் "நாம் இருவர் தானே இருக்கப்போகிறோம்; வேறு வீடு எதற்கு?" என்று கேட்டாள்.

ஏனம்மா......எனக்குப் பெரிய பணக்கார வீட்டிலே பெண் கிடைக்கும்னு சொன்னியே

..................!

காலம் சுழன்றது. ஆண்டுகள் பல அகன்றன. அன்று குளிர் காலத்தின் தொடக்கநாள். ஒரு இளம் வாலிபன் தெருவிளக்கில் படித்துக்கொண்டிருக்கிறான். அடுத்துவரும் தேர்விற்கு அயராது படித்துக்கொண்டிருக்கிறான் அவன். அவள் பார்வையில் தொலைவில் அவன் தாய் வரும் நிழல் தெரிந்தது. அவன் உடனே எழுந்து அவளை நோக்கிச் சென்றான். தள்ளாடியவாறு வந்தாள் அவள். அவள் அவனை ஆறுதலுடன்பற்றி அணைத்தவாறு வீட்டினுள் சென்றாள்.

"அம்மா, இன்று நீங்கள் என்னவே போலிருக்கிறீர்கள்; ஏன் என்னுடன் பேசவில்லை? கோபமா?"

இல்லேடா கண்ணு. உன்னோடு கோபித்துக் கொள்வேனா.

அவளுக்கு வயதாக ஆகத் தள்ளாமை அதிகரித்தது. எந்த வேலையையும் முன்போல் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. உழைத்து உழைத்து உருக்குலைந்து போனாள் அவள். வறுமை வேறு வாட்டியது. அதனாலோ என்னவோ மகனுடன் அளவளாவும் நிலையில் இல்லை அவள். பின்னர் என்ன நினைத்துக்கொண்டாளோ பேசத் தொடங்கினாள்.

"தூங்கிவிட்டாயா தம்பி"

"இல்லையம்மா. என்ன வேண்டும்?"

"எப்பொழுது உனக்குப் பரீட்சை?"

"அடுத்த மாதம் ஆரம்பமாகிறது அம்மா"

பிறகு என்ன செய்யப்போகிறாய்? அவள் விசாரித்தாள்.

பிறகு நான் பெரிய மனிதனாகி விடுவேனம்மா என்று கூறிச் சிரித்தான். இப்போது அவனுக்குத் தெரியும் "பெரிய மனிதனாவது மிகவும் கடினமென்று. ஆனால் அதைப்பற்றி எப்படி அவன் அவளிடம் சொல்லுவான்!

பரீட்சை முடிந்து சில மாதங்கள் மறைந்தன. அவன் பீ. ஏ. தேர்வில் தேர்ச்சி பெற்றான் என்று கேட்ட தாய் மகிழ்ச்சி கொண்டாள். அவனுக்கு நீண்ட ஆயுளும் குன்றாச் செல்வமும் தர அவள் வேண்டாத 'தெய்வ'மில்லை.

நாட்கள் மாதங்களாயின. அவன் தினமும் வேலை தேடிப் புறப்பட்டான். ஆனால் கவிழ்ந்த தலையுடனே தினமும் திரும்பினான். எங்கு போனாலும் வேலை காலி இல்லை, இந்த வாக்கியத்தையே கேட்டான்.

இப்போதுதான் அவன் தாய்க்கு, வேலை வேண்டுமென்றால் படித்தால் மட்டும் போதாது. வேறு "பல"வும் தேவை என்று தெரிந்தது. அவளது நம்பிக்கை தளர்ந்தது. அவள் தனது மகனை "பெரிய மனிதனாக்கிப் பார்க்க பல கனவுகள் கண்டாள். கலைந்த கனவாகியது! அவள் உள்ளத்தை வேதனை அறுத்தது.

ஒரு நாள் மாலை அவன் வேலை தேடி அலைந்துவிட்டுச் சோர்வுடன் குடிசையின் வாயிலில் அமர்ந்தான். அப்போது வீட்டினுள்ளிருந்து பெரிதாக இருமல் ஒலி கேட்கவே வீட்டினுள் ஓடினான். அங்கே அவன் தாய், அவனைப் பார்க்காமலே உயிர் நீத்துவிட்ட கோலத்தைக் கண்டான். அவளது இரு விழிகளும் அவனைப் பார்ப்பது போன்ற பிரமை அவனுக்கு.

வெளியேறினான் அவன் குடிசையை விட்டு. தெரு இருள் சூழ்ந்திருந்தது. அவனது உள்ளமும் இருண்டுபோயிருந்தது. ஆனால் அவனது தாய் அவனது கேள்விகளுக்கு அளித்த விடைகள் பசுமையாக நினைவில் வந்தன.

"அம்மா, இனிமேல் இப்படித்தான் குளிராக இருக்குமா?"

"இல்லேடா கண்ணு."

"அம்மா...ம்... நான் என்னம்மா செய்யவேண்டும்."

"எப்போடா குழந்தை."

"படிப்பு முடிந்த பிறகு அம்மா."

"படிப்பு முடிந்த பிறகு நீ ஒரு பெரிய மனிதனாகிவிடுவாய்."

"அம்மா...!

"...ம்...ம்...!

"பெரிய மனிதனான பிறகு என்ன செய்வது?

".........!"

"அம்மா, நமக்கு விளக்கு ஒன்று கிடைக்காதா?"

".........!"

"என் மேல் கோபமா? ஏனம்மா பேசவில்லை."

"அம்மா உனக்குக்குளிர்கிறதா?"

"உனக்கு குளிரவில்லையாடா குழந்தை."

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். நின்ற படியே எதிர்ப்புறம் நோக்கினான். அந்த பெரிய வீடு! அழகான வெளிச்சம்! நீலநிறத் திரை!! அவன் சட்டைப் பையில் கைவிட்டு ஒரு காகிதத்தை எடுத்தான். அடுத்த விநாடி அந்தக் காகிதம் சுக்குநூறாகக் கிழிக்கப்பட்டுவிட்டது. அந்தக்காகிதத்தை-அவனது படிப்பை விளம்பரப்படுத்தும் அந்தக் காகிதத்தைப் பெற அவன் தாய் செய்திட்ட தியாகங்கள் ஏராளம்! அவன் அடைந்த துன்பங்கள் ஏராளம். கண்ட கனவுகள் ஏராளம்! அக் காகிதத்தை காற்றிலே பறக்கவிட்டான் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறே!

★

சரியான மருந்து

மணிமுடி

தலை தானாகக் குனிந்தது; கண்கள் தானாகக் கலங்கின; வெளியிலே நான்விட்ட பெருமூச்சு வீதியிலிருந்து புறப்பட்ட தூசியை விரட்டியடித்தது.

கார்மேகக் கூந்தலிலே கண்கவரும் வண்ணப்பூ, கட்டுடலில் பட்டாடை, கையிலே ஒரு சின்னஞ்சிறு பை; அங்குமிங்கும் கண்வீசி, வளை குலுங்கும் கைவீசி அந்த நாட்டிய ஓவியம் நடைபோட்ட திருக்காட்சி; நான் பார்த்து முடித்துவிட்ட நிகழ்ச்சிச் சித்திரம்! இன்றைக்கு அவள் கூந்தலிலே கொத்துமலரில்லை! கட்டுடலில் கண்ணைப்பிடித்து இழுத்து நிறுத்தும் பட்டாடைப் பகட்டில்லை! குலுங்கும் வளைக்கையிலே பையில்லை! பைக்குப் பதிலாக ஒரு பையன். சோகம் குடிபுகுந்துவிட்ட தேகம் அசைந்து நடந்தது; பக்கத்தில் வருகின்ற பையனின் நடைக்கு இசைந்து நடந்தது. பார்த்துக்கொண்டே இருந்தேன்; சுற்றி நின்ற கும்பலைப் பற்றிக் கவலைப்படாமல் பார்த்துக்கொண்டே இருந்தேன்! எவனைப் பற்றி எவன் கவலைப்படுவது? என்னைப் பிடிக்காதவன் எவ்வளவு திட்ட வேண்டுமோ அவ்வளவு திட்டுகிறான். என்னைப் பிடித்தவன் எவ்வளவு பாராட்டவேண்டுமோ அவ்வளவுபாராட்டுகிறான். என்னைத் தெரியாதவன் 'ஏண்டா! இப்படிப் பைத்தியம்மாதிரி இருக்கிறாய்?' என்று கேட்காமல் கேட்பதுபோல் ஒரு பார்வையை வீசிவிட்டுப் போகிறான். இவர்களைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் மனிதன் வாழ்வதா? சாவதா?

'மலர்விழி! போகிறாயா? போ! போ! நிம்மதியாகப்போ! அக்கம் பக்கத்தில் இருப்பவற்றை அஞ்சு விரல்களையும் அசைத்துக் காட்டி அந்தப் பிஞ்சுப் பயல் 'அது என்ன? இது என்ன?' என்று கேட்டுக்கொண்டிருக்கிறான். நீயும் பதில்சொல்லிக்கொண்டிருக்கிறாய். கேள்வி—பதில் தொடரட்டும். தாயும் மகனுமாக நடந்துகொண்டே இருங்கள்! நான்......? நானா? எதிர்காலத்திலே நான்

புலவர்—பொன்னிவளவன்

பெற இருக்கும் பொடியனை இழுத்துக்கொண்டு அப்பாவும் மகனுமாக நடப்போம்! ஆனால் இப்பொழுது...? வேறு துணையில்லை! வேதனையைத் தவிர எனக்கு வேறு துணையில்லை!

தயிர்க்கடையா? வள்ளுவர் படிப்பகமா? என்று சந்தேகப்பட்டு உள்ளே நுழைந்து படிக்கவேண்டியதைப் படித்துவிட்டு 'இரண்டும்தான்!' என்று தெரிந்துகொண்டு, 'ஒருவேளை வள்ளுவருக்குத் தயிர் மிகவும் பிடிக்குமோ' என்று நினைத்தபடி கடைத்தெரு மூலையிலிருந்து கொடிமரத்து மூலைக்குவந்து, அங்குவந்துகொண்டிருந்த கல்லூரி நண்பர்களோடு மணிக்கூண்டுச் சோலைக்கு வந்தேனே! அன்று நான் வராமல் இருந்திருந்தால்......! வந்ததனால் என்ன கெட்டுப்போய்விட்டது? அங்கே குந்தியிருந்த நீ குளிர் சிரிப்புச் சிந்திக், கொல்லும் விழிப் பார்வை வீசினாயே, அதுதான் தப்பு! பாவையரின் பார்வைதானே மனிதனைப் பாதிக்கிறது. மகிழ்ச்சியாக இருந்த அன்றைய நிகழ்ச்சி மனவேதனையாக இப்படி மாறுவேடம் போட்டுக்கொள்ளும் என்று எதிர்பார்த்தோமா? போனது போகட்டும்! மலர்விழி! நீ நிம்மதியாக இரு! பெற்று வளர்த்தவர்களின் அன்புக் கட்டளையை என்னால் உதறித்தள்ள முடியாது. என்னை உதறித்தள்ளிவிட்டீர்களே என்று கேட்கிறாயா? என்னை மறந்துவிடு! மன்னித்துவிடு!

நான் நடந்தேன்; என்னைப் பார்த்து நாலுபேர் "பாவம்! பைத்தியம் பிடித்துவிட்டது!" என்று சொன்னதைக் கேட்டும் கேட்காதவன்போல நான் நடந்தேன்!

மலர்விழி

மலர்ந்ததிலிருந்து உதிர்ந்து விழுகிற வரை சிரித்துக்கொண்டேயிருக்கும் மலரை மதிக்கிற சமுதாயம், எப்பொழுதும் சிரித்துக்கொண்டேயிருக்கும் மனிதனை மதிக்கிறதா? சிரித்துக்கொண்டே இருந்தால் இளித்தவாயன் என்கிறது. அழுதுகொண்டேயிருந்தால் அழுமூஞ்சி என்கிறது. முகத்தைக் கொஞ்சம் கடுகடுப்பாகவைத்திருந்தால் சுடுமூஞ்சி என்கிறது. சாந்தமாக ஏதும் தெரியாதவனைப் போல் வைத்திருந்தால் அப்பாவி என்கிறது. அது என்ன சொன்னால் என்ன?

சென்ற வாரம் சிரித்துக்கொண்டிருந்த நான் இப்பொழுது அழ ஆரம்பித்திருக்கிறேன். உங்களுக்கு என்மீது கோபமா? என்னடா இது! எடுத்த எடுப்பிலேயே சோகமா? என்று முகத்தைச் சுளித்துக் கொள்கிறீர்கள், இல்லையா? சிரிப்புக்கு நூற்றாண்டு விழா என்றால், சிரித்தபடி வரவேற்கக் காத்திருக்கும் சமுதாயம் அழுகைக்கு ஆரம்ப விழா என்றால், அழத்தானே செய்யும்?

ஆஸ்பத்திரி அலுவல் முடிந்த பிறகு உடைமாற்றிக்கொண்டு காபியைச் சுவைபார்த்துவிட்டு மாலையில் மணிக்கூண்டுச் சோலையில் குந்தியிருந்த நேரத்தில்தான் அந்த மணிமுடியைச் சந்தித்தேன். மணிமுடி— மரத்திலே இருக்கிற மாம்பழம் தானாக அறுந்து அப்படியே வாயில்வந்து விழுந்துவிடாதா என்று எதிர்பார்ப்பவர். காற்றுக்கொஞ்சம் பலமாகத் தன்மீது மோதினால்கூட 'ஏது காற்று நம்மை எதிர்க்கிறதே!' என்று கவலைப்படக்கூடியவர். பாதையிலே கிடந்தமுள் குத்தினால் அதை எடுத்தெறிந்துவிட்டு நடக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், முள்ளுக்குக்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

கூட நம்மீது கோபமா? என்று ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டு அந்தப் பழைய பாதையை ஒதுக்கி விட்டு வேறு புதிய பாதையில் நடக்கக்கூடியவர். அப்பா எதிர்த் தாராம்! அதனால் 'உனக்கும் எனக்கும் இலாயக்கில்லை!' என்று இந்தப் புத்திரர் சொல்லுகிறார்.

கொத்து மலர்க்காடே! கொல்லி மலைத் தேன்கூடே! குளிர்ந்தடிக்கும் இளந்தென்றற்காற்றே! என்னைக் கொஞ்சவந்த பேரின்ப ஊற்றே! வெள்ளைமுத்தே! வேதனையைத் தீர்க்கின்ற புதுச்சொத்தே! தேன்சிட்டே! மென்பட்டே!' என்றெல்லாம் சிரித்துச் சிரித்துச் சினிமா வசனம் பேசிவிட்டுப் போய்விடுகிற ஆள்தான் இந்த ஆளும் என்று தெரிந்திருந்தால், நான் காதலித்தே இருக்கமாட்டேன்! அவர்மீது மட்டுமா தப்பு? நானும் கடைசி நேரத்தில்தானே சொன்னேன் என் கதையை. திருமணத்தை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம் என்றார் ஒரு நாள். "இதைக் கொஞ்சம் கேட்டுக் கொள்ளுங்கள். இவ்வளவு வயதாகியும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறீர்கள். எனக்கு மிகவும் பொருத்தமானவர் என்ற எண்ணத்தில்தான் நான் உங்களைக் காதலித்தேன். ஆனால் எனக்கு ஒரு ஐந்துவயதுப் பையன் இருக்கிறான். நான் முன்பே திருமணமாகி அறுத்துவிட்ட ஒரு விதவை!" என்று சொன்னேன். 'அடி பாவி!' என்று அலறினார். அந்த அதிர்ச்சி நீங்கிய கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஊரிலிருந்து வந்திருந்த என் தாயையும் என் குழந்தையையும் அவருக்கு அறிமுகப்படுத்திவைத்தேன். அவர் அப்பா என்னவோ எனக்குத் தாலிகட்டப்போகிறமாதிரி, அப்பா விடம் கேட்டுவிட்டு வருகிறேன் என்று போனார். அப்பா சம்மதிக்க வில்லையாம்! என்னை மறந்துவிடு! மன்னித்துவிடு! என்கிறார். எப்படி மறப்பது? எப்படி மன்னிப்பது?

மணிமுடியின் தந்தை

என்னடா பெரிய இழவாகப் போய்விட்டது. கொடுத்தால் பிண்ணுக்கு கொடு! இல்லாவிட்டால் செக்கிலே......! என்பது போலல்லவா இருக்கிறது கதை. இந்தப் பயல் மணியைக் கொஞ்சிய கொஞ்சலென்ன? வளர்த்தவளர்ப்பென்ன? அதற்கெல்லாம் பழி வாங்குகிற மாதிரி யாரோ நர்ஸ் மலர்விழியாம் —அறுத்துப்போன விதவை— 'அவளைத்தான்கட்டிக்கொள்வேன், இல்லாவிட்டால் செத்துப் போவேன்!' என்றெல்லாம் தலை கீழாக நின்றான். நீ செத்தாலும் பரவாயில்லை. அவளைக் கட்டிக் கொள்ளக்கூடாது. சாகப்போகிற சங்கதியைச்சொல்லவா இவ்வளவு தூரம் வந்தாய்? அவளிடத்திலேயே ஒருசொட்டு விஷம் வாங்கிச் சாப்பிட்டிருந்தால் போகிற உயிர், இந்நேரம் பாதிதூரம் போயிருக்குமே! ஏண்டா! கழுதை! உனக்கு ஏண்டா இப்படிப்புத்திபோகிறது?' என்று கத்தினேன், போனவன் போனவன்தான்! ஏதோ பைத்தியம் மாதிரி உளறிக்கொண்டு சந்தியிலே நிற்கிறான் என்று சொன்னார்கள். போய் அழைத்துக் கொண்டு வந்து படுக்கவைத்தால் பேந்தப்பேந்த விழிக்கிறான். ஓயாமல் மலர்விழி! மலர்விழி! என்று உளறல்!

'என்ன டாக்டர்! குணமாகிவிடுமா?' என்று டாக்டரைப் பார்த்துக் கேட்டால் 'உங்களுக்கு இந்தக் காலத்துப் பிள்ளைகளைத் தெரியாதா என்ன? பேசாமல் அவன் சொல்கிற பெண்ணையே கட்டி வைத்துவிட்டால் உங்களுக்கு என்ன கெட்டுவிடப்போகிறது? என்றார். ஒருவேளை டாக்டருக்கும் இவனுக்கும் ஒப்பந்தம் இருக்குமோ? பைத்தியம் மாதிரி நடிக்கிறானோ? என்று பார்த்தேன். அப்படியும் தெரியவில்லை. உண்மையிலேயே பைத்தியம் பிடித்திருந்தது. மலர்விழியாம் மலர்விழி! எங்கே இருக்கிறாள் அந்த மாயக்காரி? அவளை இழுத்துவந்து எதிரில் நிறுத்தினாலாவது பயல் துள்ளிக் குதித்து எழுந்து நிற்பானோ! இப்படி நான் நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில் அந்த நர்சே வந்தாள். அவளோடு அவள் பெற்றெடுத்த குட்டிக் குரங்கும் வந்தது. இருந்த ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு 'வாம்மா!' என்றேன்.

"ஏங்க! அவருக்கு எப்படிங்க இருக்குது?"

"பரவாயில்லை! பயல் இன்னும் சாகவில்லை!" என்று சொன்னேன். அவளுக்கு என்னவோ மாதிரியிருந்தது. அவளைக் கண்டதுமே மணிமுடி தெளிவாகப் பேச ஆரம்பித்துவிட்டான். கொஞ்சம் பற்றோடும்பாசத்தோடும் நெருங்கிப் பழகுகிற பருவமங்கைகளைக் கண்டதும் இந்தக் காலத்துப் பயல்களுக்கு ஏற்படுகிற தெளிவுக்குக் கேட்கவாவேண்டும்? வெளுத்து வாங்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அதற்குள்ளாகத் 'தாத்தா! தாத்தா!' என்று சொந்தம் கொண்டாட ஆரம்பித்துத் தோளிலே தொங்கத் தொடங்கிவிட்டான் பொடியன். டாக்டரைப் பார்த்தேன்; திருமணத்தை முடித்து விடுங்கள்!' என்றார் அவர்.

"செத்துச் சாம்பலாகிப் போக இருக்கிற கிழம் நான். இனி அதுகள் காலம்தான்! அதுகள் வைத்ததுதான் சட்டம்! நான் பெற்ற பயலை நானே கொல்லலாமா? தொலைகிறான். திருமணத்திற்கு விரைவில் ஏற்பாடு செய்கிறேன்!" என்றேன். "அதுதான் சரியான மருந்து!" என்ற வைத்திய விளக்கம் டாக்டர் வாயிலிருந்து புறப் பட்டது.

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.